வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகளின் ந.க.எண் 300/ஆ4/2021 நாள் 17-02-2021

பொருள் தேர்வுகள்- வேலூர் மாவட்டம்- 2020-2021 ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வுகள் - தேர்வெழுத சலுகைகள் கோரும் மாற்றுத்திறன் கொண்ட பள்ளித் தேர்வர்களின் பட்டியல் - சரிபார்த்து தொகுத்து பரிந்துரைப்பட்டியலை அனுப்பக் கோருதல் - சார்பு.

பார்வை
1. அரசாணை எண்.28, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள்.10.02.2010.
2. அரசாணை (நிலை) எண்.2, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள்.07.01.2012.
3.அரசாணை (நிலை) எண்.268, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள்.19.10.2012.
4.அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல் முறைகள், ந.க.எண். 002986 /எப் 1 /2021 நாள்.17.02.2021.

பார்வை 4-ல் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல் முறைகளில், பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் தேர்வெழுத சலுகை கோரி விண்ணப்பித்த பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு மாற்றுத் திறனாளி பள்ளி மாணவர்களின் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம், மாற்றுத் திறனாளிக்கான அடையாள அட்டையின் நகல் அல்லது மருத்துவக் குழுவின் பரிந்துரைக் கடிதம் ஆகியவற்றை **பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்கள் என தனித்தனியாகப் பிரித்து, பத்தாம் வகுப்பு மாணவர்களின் விண்ணப்பக் கட்டுகளை வேலூர் மாவட்டக் கல்வி அலுவலகத்திலும், மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களின் விண்ணப்பக் கட்டுகளை 3 நகலாக வேலூர் முதன்மைக் கல்வி அலுவலக ஆ4 பிரிவிலும் 19.02.2021-க்குள் ஒப்படைக்குமாறு அனைத்து மேல்நிலை / உயர்நிலைப் பள்ளி மற்றும் மெட்ரிக் பள்ளி தலைமைஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**இணைப்பு :**

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

1. மாற்றுதிறனாளித் தேர்வர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் விவரப் பட்டியல்

**பெறுநர்**

அனைத்து உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதலவர்கள்

**நகல்**

வேலூர் மாவட்டக் கல்வி அலுவலருக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.